**தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2022**

-------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கைப் பொதுத்துறைக்கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற உள்ளக கணனி மென்பொருள் அமைப்பிற்காக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 30,502,154 செலவிடப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட உள்ளக கணனி மென்பொருள் அமைப்பானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பிரகாரம் ஆதனம் மற்றும் பொறியாக கணக்கீடு செய்யப்பட்டு அதன் கிரயம் சொத்தின் பயனுள்ள ஆயுட்காலத்திற்குள் பதிவளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது நடைமுறைவேலையாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | 2023.04.19 அன்று இச்செயற்திட்டத்தின் பணிகள் நிறைவடைந்துள்ளன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பிரகாரம் கட்புலன் சொத்துக்கள் தொடர்பாக கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 51,793,404 ஆன மீண்டும் செலுத்த வேண்டிய கேள்வி வைப்பு மீதிக்கு உரிய கேள்வி வைப்புப் பதிவேடொன்று பேணப்படாத காரணத்தால் அப்பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுததுவதற்கு கணக்காய்வின்போது முடியாதிருந்தது. | கணனிமயமாக்கப்பட்ட கேள்வி வைப்புப் பதிவேடொன்று மற்றும் விரிவான ஆவணங்கள் நிதிப்பிரிவில் பராமரிக்கப்பட்ட வருகின்றன. | மீண்டும் செலுத்த வேண்டிய கேள்வி வைப்பு தொடர்பாக டென்டர் வைப்புப் பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் மோட்டார் வாகனங்களுக்கு ஆண்டுதோறும் 20 சதவீத பெறுமானத்தேய்வு செய்யப்பட வேணடியபோதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அன்று காணப்பட்ட ரூபா 6,069,363 ஆன மோட்டார் வாகனங்களுக்குரிய பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வேறுபாடு இனங்காணப்பட்டு பிழையைத் திருத்துவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | நிறுவனத்தின் சொத்துக்கள் பெறுமானத்தேய்வுக் கொள்கையின் பிரகாரம் சொத்துக்கள் தொடர்பாக பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 28 ஆம் பிரிவு | பிரிவு 24 இன் கீழ் ஒரு குறிப்பிட்ட நபருக்கு வழங்கப்படும் பயணிகள் சேவை அனுமதிப் பத்திரமொன்று மற்றொரு நபருக்கு கையளிக்கப்படக் கூடாத போதிலும், மீளாய்வாண்டில் 33 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் உரிமை கைமாற்றப்பட்டிருந்தன. | இந்தப் பிரிவு திருத்தப்பட வேண்டும் என்பதாக ஆணைக்குழு இனங்கண்டுள்ளதுடன் அங்கீகரித்து, இந்தப் பிரிவைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரமாணங்களுக்கு முரணாக 33 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் உரிமையை மாற்றியமை குறித்து விசாரணை நடாத்தி, அதற்கு காரணமான பொறுப்ப வாய்ந்த அதிகாரிகள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 02 ஆம் பிரிவு | மேலதிக நிதியை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் இணக்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சரின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் 2022 ஆம் ஆண்டில் ரூபா 641,978,981 ஆன குறுகிய கால முதலீடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | நிதியை முதலீடு செய்வதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | நிதிச் சட்டத்தின் பிரமாணங்களுக்கு முரணாக செயற்பட்டிருந்த அதிகாரிகள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் நிதிச் சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1645(அ) | வாகனங்களுக்கு பொறுப்பான அதிகாரியால் தனது பொறுப்பிலுள்ள ஒவ்வொரு வாகனத்திற்கும் வாகன | வாகன பதிவுக்குறிப்பு புத்தகமொன்று பராமரிக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக செயற்பட்டிருந்த அதிகாரிகள் மீது தேவையான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதிவுக்குறிப்பு புத்தகமொன்று வைக்கப்பட்டு ஒழுங்காக அதில் அனைத்துப் பதிவுகளும் வைக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் வாகனங்களுக்கான பதிவுக்குறிப்பு புத்தகங்கள் பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு கவனம் செலுத்த வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பீஈடி 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.8 ஆம் பிரிவு | பொது முயற்சி நிறுவனங்களால் சம்பந்தப்பட்ட நேரடி அமைச்சின் செலவுகள் செய்யப்பட முடியாத போதிலும், ஆணைக்குழுவினால் அமைச்சினால் நடாத்தப்பட்ட வேலைத்திட்டமொன்றுக் காக ரூபா 198,250 மற்றும் அமைச்சரின் உத்தியோகவூர்வ மனையின் பாதுகாப்புச்சேவைக்காக ரூபா 225,128 உம் ஆக ரூபா 423,378 ஆன செலவுகள் செய்யப்பட்டிருந்தன. | போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் எழுத்து மூலமான மற்றும் வாய்மொழி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டிருந்த அதிகாரிகள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுவதற்கு கவனம் செலுத்த வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 188,183,231 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 106,376,247 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 294,559,478 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வீதி அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 182,262,172 ஆல் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக இருந்தது.

**2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

2022 ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆணைக்குழுவின் முக்கிய வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ள வீதி அனுமதிப்பத்திர கேள்வி வருமானம் 615 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 3.03 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் விகிதமான 3.25 உடன் ஒப்பிடும் போது குறைந்த மதிப்பிற்கு கொண்டு வரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சேவைகளை வழங்குவதற்காக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான ஒழுங்கான முறைமையொன்றை தயாரித்து அதன் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு ஆணைக்குழு இதுவரை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | சட்டம் திருத்தப்படுவதற்கான பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | ஆணைக்குழு சட்டத் திருத்தம் தாமதமாவதற்கான காரணங்களை ஆராய்ந்து, சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலாபமற்ற வழித்தடங்களில் பேருந்து சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் 2005 ஆம் ஆண்டு முதல் கேமி செரிய செயற்திட்டம் தொடங்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டிறுதியில் 11 செயற்திட்டங்கள் மட்டுமே செயற்பாட்டில் இருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,287,864 செலவிடப்பட்டிருந்தது. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, ஏற்கனவே உள்ள சேவைகளை பராமரிப்பதற்கும் மற்றும் 40 புதிய சேவைகளை தொடங்குவதற்கும் ரூபா 14.890 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எவ்வித புதிய சேவைகளையும் தொடங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | மானியத் தொகையை அதிகரிப்பதற்கு நிதி போதுமானதாக இல்லாததால் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் சிசு செரிய புதிய சேவைகளைத் தொடங்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | தேவைகள் மற்றும் நிதி நிலைமைகளை சரியாகக் கண்டறிந்து செயற்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலும், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை குறிப்பிட்ட பணிகளுக்காக செலவு செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) | ஆணைக்குழுவிற்கு 2021 நவம்பர் 26 ஆம் திகதி காலி வீதி வழித்தட பேருந்துகளில் பொருத்துவதற்காக 500 GPS சாதனங்கள் போக்குவரத்து அமைச்சின் சகசர செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்டிருந்தும் , 2023 பெப்ரவரி 16 வரை பொருத்தப்பட்டிருந்த மொத்த GPS சாதனங்களின் எண்ணிக்கை 186 ஆக இருந்ததுடன் மீதமுள்ள 314 உபகரணங்களை பேருந்துகளில் பொருத்துவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்காததுடன் மேலும் மிகுதி GPS உபகரணங்களின் உத்தரவாதக் காலம் முடிவடையும் தறுவாயில் காணப்பட்டது. | தற்போது இந்த உபகரணங்களை பேருந்துகளில் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சம்பந்தப்பட்ட உபகரணங்களை உடனடியாகப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும், உபகரணங்களின் உத்தரவாதக் காலம் முடிவடையும் தறுவாயில் காணப்படுகின்ற GPS உபகரணங்களை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக பொறுப்புள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் நிசி செரிய சேவைகளை பராமரிப்பதற்கும் மற்றும் 100 புதிய செயற்திட்டங்களை செயல்படுத்துவதற்கும் ரூபா 34.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், எவ்வித புதிய சேவைகளையும் தொடங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை | மானியத் தொகையை அதிகரிப்பதற்கு நிதி போதுமானதாக இல்லாததால் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் சிசு செரிய புதிய சேவைகளைத் தொடங்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | தேவைகள் மற்றும் நிதி நிலைமைகளை சரியாகக் கண்டறிந்து செயற்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலும், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை குறிப்பிட்ட பணிகளுக்காக செலவு செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். |

### 3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, முறையான மதிப்பீடு இல்லாமல் பாதை தேவை மற்றும் 14 சேவை தர கணிப்பீடுகளுக்காக ரூபா 5,000,000 ஆன ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 2,568,180 செலவிடப்பட்டு 17 கணிப்பீடுகள் நடாத்தப்பட்டு மீதமுள்ள ஏற்பாடுகளில் இலக்கிடப்பட்ட பணிகளுக்கு முரணாக பேருந்து முனையங்களின் செயற்பாடு மற்றும் பராமரிப்புக்காக ரூபா 2,621,665 செலவிடப்படடிருந்தது.. | எதிர்கால செயற்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கும் போது இது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | தேவைகள் மற்றும் நிதி நிலைமைகளை சரியாகக் கண்டறிந்து செயற்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலும், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை குறிப்பிட்ட பணிகளுக்காக செலவு செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்துக்கு சொந்தமான வாகனமொன்று ரூபா 283,135 செலவிடப்பட்டு திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படாமல் நிறுவன வளாகத்தில் நிறுத்தப்பட்டு சிதைவடைந்து காணப்பட்டது. | பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | பயன்படுத்தக்கூடிய சொத்துக்களை முறையாக பிரயோசனப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |